ESCR | Newsletter

ISSUE 12, DECEMBER 2014

## வ்ர்து ஊயுளுநு ழுகு வ்ர்து ஐஏஜஐளுஜஐடுடுநு ஆயுே: "சுழுவுநுஊவுஜஐபே வ்ர்து சுஜஐபுர்வுளு ழுகு வ்ர்து ஆயுடுநு ஆஜஐபுசுயுவே றுழுசுமுநுசு



Photo : ILO Apex Image

"எனது தந்தையார் ஒவ்வொரு நாளும் எங்களை அழைத்து நாங்கள் அவரை மீள அழைத்துக் கொள்ள வேண்டும் என விரும்பினார். அவரது வேலைகொள்வோர் அவரை அடிக்கடி தாக்கியதுடன் அவரது வீசா காலாவதியான பின்னரும் கூட அவரைத் திரும்ப வருவதற்கு அனுமதிக்கவில்லை. எனது தந்தை இந்த வருடம் மார்ச் 8 ஆம் திகதி இறந்தார் அவரது உடல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. அவரது சம்பளம் 18 மாதங்களாக கொடுப்பனவு செய்யப்படவில்லை. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமோ அல்லது முகவரோ வேலைகொள்வோருக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை, எனக் கூறினார் கேகாலையைச் சேர்ந்த சரத் வசந்தக் குமாரவின் மகன். சரத் ஒரு குதிரை ஓட்டுனராக சவுதி அரேபியாவுக்கு 2011 இல் சென்றார்.[1]

வெளிநாட்டு மண்ணில் பசுமையைத் தேடுவதற்கு உள்நாட்டில் நிர்ப்பந்திக்கப்பட்ட, சரத் போன்ற வேறு பலர், அக்கரையிலுள்ளது எப்போதும் பச்சையில்லை என்பதை மட்டுமே, பெரும் செலவில் கண்டு பிடித்தனர். இலங்கையில் புலம்பெயர் பணியாளர்கள் தொடர்பான உரைகள் மத்திய கிழக்கில் பணியாற்றும் வீட்டுப் பணிப்பெண்களின் கரிசனைகள் மீதே கவனம் செலுத்தியதுடன் பிரத்தியேகமாக பெண்கள் தொடர்பான பிரச்சினையாகவே அநேகம் அவை கருதின. இதன் ஒரு விளைவாக, வேலை வாய்ப்புகளுக்காக புலம்பெயரும் ஆண்களின் கரிசனைகள் இதிலுள்ள இடைவெளிகள் காரணமாக கவனிக்கப்படாது விட்டன அல்லது பால்நிலையை பிரதானமாகக் கொள்ளும் உரைகளுக்குள் குறிப்பிடப்பட்டன. 2011 இன் படி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான ஒட்டுமொத்த வெளிச்செல்வோரில் 51 சத வீதத்தை ஆண்கள் கட்டமைத்த போதிலும், இதுவே உண்மையான நிலையாக இருந்தது. அத்தகையதொரு அதிகரிப்பு, ஆண்களின் புலம்பெயர்தலை ஊக்குவிப்பதற்கு இலங்கையினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தீர்மானங்களால் விளக்கப்பட முடியும்.

### உரிமைகள் மற்றும் இடரேதுநிலைகளை இனங்காணுதல்

பெண்கள் கூடுதல் இடரேதுநிலை கொண்டவர்களாக சமுதாயம் கருதுகின்ற உண்மையினால் புலம்பெயர் பெண் பணியாளர்கள் மீதான கவனமும் குறிப்பிடப்படுகிறது. பாலியல் வன்முறை போன்ற சில விடயங்களில் இது உண்மையானதாக இருக்கின்ற வேளையில், பதிவு செய்யப்பட்ட பெண் பணியாளர்கள் தொடர்பாக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் பெறப்பட்ட 5801 முறைப்பாடுகளுடன் ஒப்பிடுகையில், 1552 முறைப்பாடுகள் ஆண் பணியாளர்கள் தொடர்பான கரிசனை கொண்டவையாக உள்ளதென புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. ஆண் பணியாளர்கள் தொடர்பிலான முறைப்பாடுகளில் கணிசமான 70 முறைப்பாடுகள், பாலியல் ரீதியாக தொல்லைப்படுத்தப்பட்டவை தொடர்பானவையாகும். மேலும், பதிவு செய்யப்பட்ட பெண் பணியாளர்களின் 49 இறப்புகள் தொடர்பான முறைப்பாடுகளுடன் ஒப்பிடுகையில் ஆண் பணியாளர்களின் 59 இறப்புகள் முறைப்பாடு செய்யப்பட்டன.2 ஆகையால், எந்தவொரு வகையிலும், குறைந்த கடினமான வேலைச் சுற்றாடல்களில் அல்லது அவர்களின் பால் நிலைப்பாட்டினால் குறைந்த இடரேதுநிலைகளில், ஆண்கள் இடப்படவில்லை.

முரண்பாடான வகையில், ஆண் புலம்பெயர் பணியாளர்கள் அவர்களின் பால்நிலையின் அடிப்படையில் குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கலாம். ஆண் புலம்பெயர் பணியாளர்கள் அனுமதியற்ற துணை முகவர்களால் அதிகரித்த ஆட்சேர்ப்புக் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கு அதிகம் தேவைப்படுத்தப்படுகின்றனர், இது அவர்களைக் கடனில் கொண்டு விடுகிறது.3 அத்தகைய அதிகரித்த ஆட்சேர்ப்புக் கட்டணத்தை கொடுப்பனவு செய்யும் முகமாக, சில புலம்பெயர் பணியாளர்கள் சம்பளக் கழிப்புத் திட்டங்களுக்கு இணங்குவது அவர்களது வருமானத்தை கடுமையாகவும் மற்றும் நட்டம் ஏற்படும் வகையிலும் பாதிக்கிறது. ஆடைக் கைத்தொழிலில் ஊழியர்களாக பெண்களை அமர்த்துவதற்கு ஆட்சேர்ப்பவர்களால் விருப்பம் காட்டப்படுவதன் விளைவாக, ஆண் பணியாளர்களிடமிருந்து ஒரு அதிகரித்த ஒரு பணிக்கமர்த்தும் கட்டணத்தை முகவர்கள் தேவைப்படுத்துகின்றனர், அது இடத்தை உறுதிப்படுத்தும் முகமாக ஊழியர்களுக்கு இலஞ்சம் கொடுப்பதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. அத்தகைய செலவினங்கள் ஆண் புலம்பெயர்வோருக்கு கடனில் மூழ்குவதற்கான குழியை இன்னமும் ஆழமாக்குகிறது.

அனைத்து புலம்பெயர் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின்4 உரிமைகளின் பாதுகாப்பு மீதான சர்வதேச உடன்படிக்கையின் உறுப்புரை 1, ஒரு ஷபுலம்பெயர் பணியாளரை' அவர் ஒரு பிரஜை அல்லாத நாட்டில் ஊதியம் பெறும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு உள்ள, ஈடுபடுகின்ற அல்லது ஈடுபட்டுள்ள ஒரு நபரென வரைவிலக்கணப்படுத்துகிறது. இந்த உடன்படிக்கை புலம்பெயர் பணியாளர்களை மீனவர்களை உள்ளடக்குகின்ற "கடலோடி" போன்ற விசேட வகைகளுக்குள் மேலும் வகைப்படுத்துகிறதுடன், அவர் பிரஜையல்லாத ஒரு நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஒரு கப்பலின் தளத்தில் வேலை செய்யும் ஒரு புலம்பெயர் பணியாளரை "ஒரு கரைக்கு வெளியேயான இணைப்பிலான பணியாள" எனக் குறிப்பிடுகிறது. "ஒரு கரைக்கு வெளியேயான இணைப்பிலான பணியாள்" என்பது ஒரு நாட்டின் நியாயாதிக்கத்தின் கீழ், அந்நாட்டின் பிரஜையல்லாது வேலைக்கமர்த்தப்பட்டஒரு புலம்பெயர் பணியாளர் எனக் குறிப்பிடுகிறது அல்லது "செயல்திட்டத்துடன் பிணைக்கப்பட்ட பணியாளர்" என்பது ஒரு புலம்பெயர் பணியாளர் ஒரு வரையறுக்கப்பட்ட காலத்துக்காக அந்த நாட்டில் அவரது வேலைகொள்வோரால் மேற்கொள்ளப்படும் தனியே ஒரு குறித்த செயல்திட்டத்துக்காக அனுமதிக்கப்பட்ட ஒரு புலம்பெயர் பணியாளரைக் குறிக்கிறது.

இந்த வகைப்பாடுகளின் முக்கியத்துவம் தொழில்நுட்பத் தன்மைகளுக்கு அப்பால் செல்கிறது. உடன்படிக்கையின் 57ஆவது உறுப்புரையின்படி, ஒரு புலம்பெயர் பணியாளருக்கு அளிக்கப்பட்ட உரிமைகளின் தன்மை, புலம்பெயர் பணியாளரும் மற்றும் அவரது குடும்பத்தவர்களும் அமைகின்ற குறிப்பிட்ட வகையின் அடிப்படையில் வேறுபடலாம். மேலும், உறுப்புரை 3, உடன்படிக்கை அதனுள், ஒரு வெளிநாட்டில் பயிலுனர்கள், கடலோடிகள் மற்றும் ஒரு கரைக்கு

---

1 'நூற்றுக் கணக்கான புலம்பெயர் பணியாளர்கள் மூடப்பட்ட சவப்பெட்டிகளினுள் நாடு திரும்புகின்றனர்', சன்டே லீடர், ஒக்டோபர் 5, 2014.

2 'இலங்கை: சுரண்டல் வடிவ வேலைகளிற்கு போவதிலிருந்து பெண் புலம்பெயர் பணியாளர்களைத் தடுப்பதற்கான சிறந்த நடைமுறை', மல்சிறி டயஸ் மற்றும் ரமணி ஜயசுந்தர, GENPROM Working Paper No. 9.

3 ஐக்கிய நாடுகள் அரச திணைக்களம், சட்டவிரோத ஆட்கடத்தல் 2013 அறிக்கை - இலங்கை, ஜுன் 19, 2013.

4 ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, அனைத்து புலம்பெயர் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகளின் பாதுகாப்பு மீதான சர்வதேச உடன்படிக்கை, டிசம்பர் 18, 1990, A/RES/45/158.

வெளியேயான இணைப்பிலான பணியாளர்கள் எனும் தகைமையில் தொழில் செய்யும் நாட்டில் தங்கியிருப்பதற்கான இடத்தை எடுப்பதற்கும் மற்றும் ஒரு ஊதியம் பெறும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் அனுமதிக்கப்படாத ஆட்களைப் பாதுகாக்கவில்லை. ஆண் புலம்பெயர் பணியாளர்கள், தேர்ச்சியற்ற தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், அல்லது கப்பல் ஓட்டுபவர்கள் என வேறுபடுகின்ற தொழில்களில் ஈடுபடுகின்றனர். 'வேலைகொள்வோரின் விதிமுறைகளுக்கு இணங்கியதாக கொரியாவிலும், மற்றும் மத்திய கிழக்கில், விசேடமாக சவுதி அரேபியா, கட்டார் நாடுகளில் மேலதிக வேலை நேரத்திற்கு மேலதிக கொடுப்பனவின்றி' மிகுந்த மோசமான நிலைமைகளின் கீழ் அவர்கள் தொழில் செய்கின்றனர்.[5] தங்களது வேலையின் தன்மை பற்றிய முறையான விளக்கமின்மை பொருத்தமான உரிமைகளின் கட்டமைப்பில் ஒரு தெளிவற்ற நிலையை ஏற்படுத்த முடியுமென்பதோடு, சில சந்தர்ப்பங்களில் உடன்படிக்கையின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்ட ஒரு பணியாளரின் பாதுகாப்பை முற்றிலுமாக மறுக்கலாம்.

மேலும், வெளிநாட்டில் பிரவேசித்த பின்னர், அநேகமான சந்தர்ப்பங்களில், புலம்பெயர் பணியாளர்கள் ஒப்பந்தங்களை மாற்றியமைப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர், இது அவர்களது நிலைப்பாட்டின் தன்மையையும் மற்றும் அதனால் பாதுகாப்பையும் கணிசமான வகையில் பாதிக்கலாம். வேறுபடுகின்ற தொழில்களோடு இணைந்த உரிமைகளின் நுட்பமான முறைமைகள் பற்றிய விழிப்புணர்வு தங்களது பாதுகாப்பு மற்றும் நன்னிலைகளை உறுதிப்படுத்தும் ஒரு அறியத்தரப்பட்ட தெரிவை மேற்கொள்வதற்கு புலம்பெயர் பணியார்களை இயலச் செய்யும்.

## ஒவ்வொருவருக்கும் உதவும் பயிற்சி

புலம்பெயர் பணியாளர்கள் வெளி நாட்டில் இருக்கும் போது பாதுகாப்பாக இருப்பதற்கு, அவர்கள் ஒரு அந்நிய கலாச்சாரத்தில் முன்செல்வதற்கு அவசியமான திறன்கள் மீதான முறையான பயிற்சியை அவர்கள் பெறுவது பொருத்தமானதாகும், மிக முக்கியமாக வெளிநாட்டில் உள்ள வேலையில் அவர்களது சட்ட உரிமைகள் அவர்களது புறப்படுதலுக்கு முன் அவர்களைத் திருப்திப்படுத்தல் வேண்டும். உடன்படிக்கையின் 33 ஆவது உறுப்புரையின்படி, புலம்பெயர் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு அவர்களுக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள், அவர்களது அனுமதியின் நிபந்தனைகள், சம்பந்தப்பட்ட நாட்டின் சட்டம் மற்றும் நடைமுறைகளின் கீழ் அவர்களது உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மற்றும் அந்த நாட்டில் நிர்வாக அல்லது ஏனைய நடைமுறைகளுடன் அவர்கள் இணங்குவதற்கு இயலச் செய்யும் ஏனைய விடயங்கள் என்பவற்றின் மீதான தகவல்களை வழங்குவதற்கு, புலம்பெயர் பணியாளரின் சொந்த நாடாக இலங்கை ஒரு கடப்பாட்டைக் கொண்டுள்ளது. அத்தகைய தகவல்கள் புலம்பெயர் பணியாளர்களுக்கு மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு வேண்டுகோளின் பெயரில், இலவசமாக, மற்றும் இயலுமான வரை அவர்களால் விளங்கிக் கொள்ளக்கூடிய மொழியில் வழங்கப்படல் வேண்டும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இந்தக் கடப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கான பொறுப்புடன் சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நாடு திரும்பும் புலம்பெயர் பணியாளர்களால் முன் வைக்கப்படும் ஒரு பொதுவான விமர்சனம், பணியகத்தினால் வழங்கப்படும் பயிற்சி வெளிநாட்டில் இருக்கையில் தங்களது சொந்தப் பாதுகாப்பு மற்றும் நன்னிலையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அறிவு மற்றும் திறன்களுடன் புலம்பெயர் பணியாளர்களை முழுமையாக தயார் படுத்துவதில்லை என்பதாகும்.[6] மேலும், வேறுபட்ட வகையான பணியாளர்களின் வேறுபட்ட தேவைகளுக்கு பொருத்தமாக பயிற்சிகளை தனிப்பயனுள்ளதாக்குவதற்குப் பதிலாக, வழங்கப்படுகின்ற அத்தகைய பயிற்சித் திட்டங்களில் பெரும்பாலானவை வீட்டுப் பணிப்பெண் தொழிலாளர்களுக்கானவையாக உள்ளன. பெண் தொழிலாளர்களைப் போலல்லாது, பயிற்சித் திட்டங்களில் இணைத்துக் கொள்வதற்கு ஆண் பணியாளர்களை அரசு சட்டரீதியாக கடமைப்படுத்துவதில்லை. ஆண் புலம்பெயர் பணியாளர்களுக்காக திறந்துள்ள ஒரேயொரு பயிற்சித் திட்டம், தையல் இயந்திர இயக்குனர்களுக்கான பயிற்சியை வழங்குகின்ற ஒன்றாகும்.[7] ஆகையால், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஒவ்வொரு தனிப்பட்ட பணியாளரின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கும் பக்கத்தில் தவறுவதற்குப் பதிலாக, குறைந்தளவிற்கு பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட தொழிலாளர்களின் செலவில் பெரும்பான்மையானவர்களுக்கு உதவும் ஒரு நிர்வாகப் பொருத்தமுடைய கொள்கைக்கு விரும்பியதாகக் காணப்படுகிறது.

## அபாய வாயப்புக் காரணிகள் : பாதிக்கப்பட்டவரிலிருந்து தவறிழைப்பவருக்கு



Photo : ILO Apex Image

அநேகமான புலம்பெயர் பணியாளர்கள் சட்ட விரோதமாக ஆட்கடத்தப்படுவதற்கான அபாய வாய்ப்பில் உள்ளனர். உறுப்புரை 3 இன் தடுத்தல், அடக்குதல் மற்றும் ஆட்கடத்துபவர்களைத் தண்டித்தல்[8] தொடர்பான பந்தி (அ) ஆட்கடத்தலை, அச்சுறுத்தல் அல்லது பலத்தைப் பிரயோகித்தல், கட்டாயப்படுத்தல், கடத்தல், மோசடி, ஏமாற்றுதல். அதிகாரம் அல்லது இடரேதுநிலையின் துர்ப்பிரயோகம், அல்லது ஏனையவர்களின் விபச்சாரத்தைச் சுரண்டுதல், பாலியல் ரீதியான சுரண்டுதல், கட்டாய வேலை, அடிமை அல்லது அதைப் போன்ற நடவடிக்கைகள் மற்றும் உடலுறுப்புகளின் அகற்றுதல் என்பவற்றை உள்ளடக்குகின்ற சுரண்டல் நோக்கத்துக்காக பாதிக்கப்பட்டவரை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு நபருக்கு கொடுப்பனவுகளின் நன்மைகளை அளித்தல் போன்ற வழிமுறைகளுடாக ஆட்சேர்த்தல், போக்குவரத்துச் செய்தல், இடம் மாற்றுதல், ஆட்களுக்கு புகலிடமளித்தல் அல்லது ஆட்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையாக வரையறுக்கிறது. ஆட்கடத்தலானது புலம்பெயர் பணியாளர்கள் இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்பதாகக் கூட, அனுமதியளிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முகவர்களின் கைகளில் தொடங்க ஆரம்பித்து விடுகிறது, இவர்களில் அநேகமானவர்கள் இலங்கையின் அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் அனுமதியளிக்கப்படாத துணை முகவர்களாகும்.[9] சேரும் நாட்டிற்கு சென்றதும், புலம்பெயர் பணியாளர்கள் பாலியல் சுரண்டலிலிருந்து கட்டாய வேலை வரைக்குமான பல்வேறு வடிவ சுரண்டுதல்களுக்கு அநேகம் ஆளாகின்றனர்.

ஆட்கடத்தலானது ஆண் மற்றும் பெண் ஆகிய இரு புலம்பெயர்

---

5 முன்குறிப்பிடப்பட்ட குறிப்பு 2, பக்கம் 10 இல்

6 ஐக்கிய நாடுகள் அரச திணைக்களம், சட்டவிரோத ஆட்கடத்தல் 2013 அறிக்கை - இலங்கை, ஜுன் 19, 2013.

7 முன்குறிப்பிடப்பட்ட குறிப்பு 2, பக்கம் 10 இல

8 ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களை, ஆட்கடத்துபவர்களை தடுத்தல், அடக்குதல் மற்றும் தண்டிப்பதற்கான உடன்பாட்டு நெறிமுறை, நாடுகளுக்கிடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையை பிரதியீடு செய்கிறது, நவெம்பர் 15, 2000.

9 முன்குறிப்பிடப்பட்ட குறிப்பு 5

பணியாளர்களுக்கும் பொதுவான கரிசனைக்குரியாதாக இருக்கையில், மனிதக் கடத்தல் ஆண்களுக்கு கூடுதல் குறித்துரைத்தல் கொண்ட பிரச்சினையாக உள்ளது. நாடுகளுக்கிடையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் மீதான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை மற்றும் புலம்பெயர்வோரின் ஆட்கடத்தலுக்கு எதிரான அதன் உடன்பாட்டு நெறிமுறை[10] என்பவற்றுக்கமைவாக, மனிதக் கடத்தல் என்பது "ஆளொருவர் பிரஜையல்லாத அல்லது ஒரு நிரந்தர குடியிருப்பவரல்லாத ஒரு நாட்டிற்குள் நபரொரவரை சட்ட விரோதமான முறையில், ஒரு நிதி ரீதியான அல்லது பொருள் ரீதியான நன்மையை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெறும் முகமாக அடைதல்" என விவரிக்கிறது. மனிதக் கடத்தலுக்கான ஒரு வெளிப்படுத்தல், டசின் கண்கான இளம் ஆட்கள் இத்தாலி, ஜேர்மனி அல்லது அவுஸ்திரேலியா போன்ற நாடுகளினுள் சட்ட விரோதமாக நுழைவதற்கு மீன்பிடிப் படகுகள் மூலமாக எத்தனிப்பதாகும். அத்தகைய நடவடிக்கைகள் புலம்பெயர் பணியாளர்களின் தனிப்பட்ட முன்னெடுப்பின் மூலமாக புரியப்படுபவையல்ல. அது, ஒரு பெரிய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் தொழிலின் ஒரு சிறிய கூறு மட்டுமே. மனிதச் சரக்கு வடிவில் ஒரு வெளிநாட்டில் பயணிப்பதன் மூலம் தங்களது வாழ்க்கையை அபாய வாய்ப்புகளில் இடுவதற்கு ஏதுவாக புலம்பெயர் பணியாளர் அளவுக்கு அதிகமான கட்டணங்களைச் செலுத்த வேண்டியதாக உள்ளது.[11]

கடுமையான பொருளாதார நிலைமைகள் ஒரு மனிதனை, அத்தகையதொரு முயற்சியை எடுப்பதற்கு தள்ளிவிடுவதை ஒருவர் அங்கீகரிக்கையில், மனிதக் கடத்தலில் சம்பந்தப்படும் ஒரு புலம்பெயர் பணியாளர் ஆட்கடத்தலுக்கு வெளிப்படுத்தப்பட்ட ஒருவர் போன்று அதே நோக்கில் பார்க்கப்படுவதில்லை. ஆட்கடத்தலின் ஓர் உள்ளார்ந்த பகுதியாக ஏமாற்றுதல் மற்றும் பலவந்தபடுத்தலுக்கு உள்ளான காரணத்தினால், அது புலம்பெயர் பணியாளரை பாதிக்கப்பட்டவரின் நிலையில் இடுகிறது. மறுபுறத்தே, மனிதக் கடத்தலானது, கடத்தப்படும் ஆளின் உடந்தையோடு மேற்கொள்ளப்படுகின்றதுடன், ஒரு வெளிநாட்டில் பிரவேசிக்கும் முகமாக சட்ட விரோத நடவடிக்கைகளில் அவசியம் சம்பந்தப்படுகிறது. இதன் காரணமாக, வெளிநாட்டிற்கு பிரவேசிக்கும் நிலையில், வேலைவாய்ப்பை நாடும் அத் தனிப்பட்டவர், அந்த நாட்டின் சட்டத்தை ஏற்கனவே மீறிவிட்டார். அதனால், அத்தகைய தனிப்பட்டவர்களின் உரிமைகளின் பாதுகாப்புக்காக ஆதரித்து வாதாடுதல் என்பது, புலம்பெயர் பணியாளர் தனியே ஒரு பாதிக்கப்பட்டவர் மாத்திரமின்றி சட்டத்தின் தவறான பக்கத்தில் உள்ளவராகவும் இருக்கின்ற காரணத்தினால் ஒரு கூடுதல் கடினமான பணியாக வருகிறது. அவர்கள் தரப்பில் இந்தக் குறைகூறும் நிலையின் சாத்தியமான காரணத்தினால், மனிதக் கடத்தல் புலம்பெயர் பணியாளர்களின் உரிமைகள் தொடர்பான கொள்கைகளில் குறைவான கவனத்தைப் பெற்ற போதிலும், இலங்கையர்களாக, இந்த தனிப்பட்டவர்கள், ஏனைய பிரஜைகளைப் போலவே அரசின் சமனான பொறுப்புக்கு பாத்திரமானவர்கள் என்பதை ஒருவர் மனதில் கொள்ளுதல் வேண்டும்.

### இடைவெளிகளை நிரப்புதல்

இந்தக் கட்டுரையின் நோக்கம் எந்தவொரு வகையிலும் பெண் புலம்பெயர் பணியாளர்களின் நிலையை அற்பமாக்குவதல்ல. எவ்வாறாயினும், ஒரு அந்நிய தேசத்தில் அவர்களது தாய் மாடாக உழைக்கையில் புலம்பெயர் பணியாளரின் கதையில் தனது பிள்ளைகளை தந்தை புறக்கணிக்கின்ற போதே தனியே நீண்ட காலத்திற்கான ஆணின் பிரசன்னம் வெளிப்படுகிறது. ஆண் புலம்பெயர் பணியாளர்களிற்குப் பிரத்தியேகமான, கரிசனைகளை ஆராயும் ஆராய்ச்சி மற்றும் இலக்கியங்களின் எண்ணிக்கை அரிதாக உள்ளது. தனது பெண் எதிரிணையைப் போன்றே பாதுகாப்புக்கு உரித்தான, ஆண் புலம்பெயர் பணியாளர் மீதான ஒரு பார்வையை வழங்குவதற்கு, யதார்த்தத்திற்கு நெருங்கிய ஒரு விவரணத்தின் நேரத்திற்கான கெடு முடிந்தள்ளது.

**வி'ரக்கா விஜயநாயக்க**[12]

10 ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, நிலம், கடல் மற்றும் வான் மூலம் புலம்பெயர்வோரின் ஆட்கடத்தலுக்கு எதிரான உடன்பாட்டு நெறிமுறை, நாடுகளுக்கிடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையை பிரதியீடு செய்கிறது, நவெம்பர் 15, 2000.

11 முன்குறிப்பிடப்பட்ட குறிப்பு 2, ப 15 இல்.

12 LLM விண்ணப்பதாரி (மிச்சிக்கன் பல்கலைக் கழகம்): சட்டத்தரணி: LLB (கொழும்பு பல்கலைக் கழகம்)

## நேர்மறையான சமூக மாற்றத்திற்கான ஒரு பாதையை சட்டம் வழங்க முடியுமா? 'இரத்தினபுரிப் பட்டியின்' சுவாரசியமான வழக்கு

ஒரு மாதத்திற்கும் சற்றும் முன்னதாக ஒரு கையடக்கத் தொலைபேசியில் பிடிக்கப்பட்ட ஒரு குறுகிய காணொலிக் காட்சி இலங்கையில் வி'ம் போல பரவியது. அக்காணொலி, இரத்தினபுரி நகரின் பஸ்நிலையத்தில் நிலத்தில் வீழ்ந்து கிடந்த ஒரு பெண்ணை ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் ஒரு இடுப்புப் பட்டியினாலோ அல்லது கேபிள் துண்டினாலோ அடிப்பதை அப்பட்டமாகக் காண்பித்தது. பல ஊடக நிறுவனங்களால் அது காண்பிக்கப்பட்ட பின், காணொலி ஒரு தீவிர பொது விவாதத்தை மக்கள் மத்தியில் எழுப்பி, அந்தப் பொலிஸ் சார்ஜன்ட் இனங் காணப்பட்டு தற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் மற்றும் அந்தப் பெண் ஓர் அடிப்படை உரிமை வழக்கை தாக்கல் செய்வதில் உதவுவதற்கும் வழி செய்தது.

'இரத்தினபுரிப் பட்டியின்' (அப் பெண் இவ்வாறு அறியப்படலானார்) வழக்கு பொலிஸ்துறையின் ஊழல் மற்றும் வன்முறை என்பவற்றினதும் மற்றும் சுயமாக குற்ற ஒப்புதலை வழங்கிய பாலியல் தொழிலாளியும் மற்றும் போதை மருந்துக்கு அடிமையான அந்தப் பெண்ணை விட குற்றஞ்சாட்டப்பட்ட மற்றும் வன்முறையைப் பிரயோகித்த அந்த பொலிஸ் சார்ஜன்ட்டிற்கு ஆதரவு அளிப்பதற்கு தெரிவு செய்த 'மரியாதைக்குரிய சமூகத்தின்' சில உறுப்பினர்களின் தவறான அபிப்பிராயங்கள் என்பவற்றினதும் மற்றுமொரு கவலை தரும் உதாரணமாகவும் காணப்பட முடியும். எவ்வாறாயினும், இந்தக் கதை மற்றுமொரு காரணத்திற்காவும் சுவாரசியமானதாக இருக்கலாம். தனது கதையை மிகவும் வெளிப்படையாக வந்து தெரிவித்த அவரது தனிப்பட்ட தைரியத்திற்கு அப்பால், தங்களது உரிமையைக் கோருவதற்காகப் பேசுவதற்கும் மற்றும் செவி மடுக்கப்படுவதற்கும் சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கு சட்டம் மற்றும் குறிப்பாக நீதிமன்றம் ஒரு இடம் வழங்கிய வகிபாகம் தொடர்பில், பட்டியின் வழக்கு, சுவாரசியமான கேள்விகளை எழுப்புகிறது. அவர் நாடுகின்ற நீதியை, பட்டி, தாக்கல் செய்த அடிப்படை உரிமை வழக்கு வழங்குகிறதா அல்லது இல்லையா என்பது பொறுத்திருந்து தான் பார்க்கப்படல் வேண்டும் (வழக்கு ஜனவரியில் விசாரணைக்கு வரும் பொழுது எங்களில் பலரும் அதனை அவதானிப்போம் என்பதில் ஐயமில்லை). இதே வேளை, சமூக செயற்பாடுகளுக்காக சட்டத்தை உபயோகிப்பதின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் மீது பிரதபலிப்பதற்கு சட்டத்துறையில் பணியாற்றும் எங்களுக்கு அவரது கதை ஒரு முக்கியமான வாய்ப்பையும் வழங்குகிறது.

கடந்த 60 வருடங்களுக்கும் மேலாக மனித உரிமைகள் அமைப்புகள் அனைத்து மனிதப் பிறவிகளினதும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்து மற்றும் முன்னேற்றுவதற்கான வழிகளாக சட்டக்கட்டமைப்புகளையும் மற்றும் பொறிமுறைகளையும்

உருவாக்குவதற்கு கடுமையாக உழைத்துள்ளன. இந்த அணுகுமுறையை ஆதரிப்பவர்கள் சட்ட முறையான நிலை மற்றும் அதிகாரத்தின் ஒரு மொழியை சட்டம் வழங்குவதாகக் கூறுகின்றனர், 'அதிகாரத்திற்கு உண்மையைப்' பேசும் போது அது ஒரு சக்தி மிக்க கருவியாக இருக்க முடியும். பதிலுக்கு விமர்சகர்கள் சட்டம் அதன் தன்மையால் மிகவும் பழமைவாதமானதாகவும், சமூக மாற்றத்திற்கான அடிப்படைச் சாத்தியங்களுக்கு திறந்து கொள்வதற்கு, இருக்கின்ற அதிகாரக் கட்டமைப்புகளுக்கு அது அதிகம் பிணைக்கப்பட்டதாக உள்ளது, என வாதிட்டனர்.

வேறுவகையில் சமுதாயம், அரசியல்வாதிகள் மற்றும் அரச நிறுவனங்கள் போன்றவற்றினால் உதாசீனம் செய்யப்பட்ட மக்களுக்கான வழிகளை பொதுநலன் சார்ந்த வழக்காடல்கள் திறந்து விட்ட சம்பவங்களை, அனுபவரீதியான ஆய்வுகள் காட்டுகின்றன. இந்தியாவில், அதிகாரிகள் பொறுப்புக் கூறுவதற்கு ஒடுக்கப்பட்ட பல குழுக்களால் இது உபயோகிக்கப்பட்டது. ஹுசைனாரா கஹட்டூன் மற்றும் ஏனையவர்கள் எதிர் உட்துறைச் செயலாளர், பீகார் அரசு (1979) எனும் இந்த வழக்கில், உயர் நீதிமன்றம் இலவசமான சட்ட உதவி மற்றும் விரைவான விசாரணை என்பவற்றுக்கான கைதிகளின் உரிமையை நிலைநாட்டியது. இதேவேளை, ஐக்கிய அமெரிக்காவில் பாரபட்சத்திற்கு எதிரான முன்னைய காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு, வழக்காளிகள் இறுதியில் வெற்றியாளர்களாக இல்லாத போதிலும், வழக்குகள் பொது விவாதங்களைத் தூண்டிவிடுவதற்கு: அதாவது பொதுமக்கள் மனப்பாங்குகளில் மெதுவான மாற்றத்திற்கு இடமளிக்கும் ஒரு செயன்முறைக்கு ஒரு பயனுள்ள வழிகளை இன்னமும் அளித்தது. அவ்வாறே, நிர்வாக மற்றும் ஏனைய கட்டமைப்பு ரீதியாக காணப்பட்ட அநீதிகளின் மாற்றீட்டுக்கான ஒரு வழியாக புதிதாக அமுல்படுத்தப்பட்ட 'சட்டவாட்சியின்' சீர்திருத்தங்களை உபயோகிப்பதில் சீன வழக்காளிகளின் முயற்சிகள் பற்றிய ஒரு அண்மைய ஆய்வு, அவர்கள் விரும்பிய பெறுபேற்றை பலர் பெற்றுக் கொள்ளாத போதிலும், அவர்கள் அச்செயன்முறையால் வலுவளிக்கப் பட்டவர்களாக உணர்ந்ததைக் காட்டியது. அவர்களது சொந்த கற்றுக்கொள்ளுதலிற்கு புறம்பாக, அரசியல் பங்குபற்றுதல் மற்றும் சமூக செயற்தன்மைகளுக்கான ஒரு புதிய வழியை நீதிமன்றம் அவர்களுக்கு வழங்கியது.



**Photo : Benzene Aseel**

இதே வேளை, சில பெண்ணிய சட்ட ஆர்வலர்கள் நிலவும் நிலையை சவாலுக்கு உட்படுத்துவதற்கான உண்மையான சாத்தியங்களை சட்டம் வழங்குகிறதா என ஐயம் எழுப்பினர். தேசிய மற்றும் சர்வதேச பாலியல் வல்லுறவு தொடர்பிலான எனது சொந்தப் பணிகளிலில், பாதிக்கப்பட்டவர்கள் வழமையாக 'உண்மையான பாதிக்கப்பட்டவர்களாக' குறிப்பிட்ட வகிபாகத்தை அவர்கள் வகிக்கும் போது மட்டுமே சட்டத்தின் முன் அங்கீகாரத்தை பெறுவதற்கு இயலுமாக உள்ளது என நான் அநேகம் கண்டுள்ளேன். இது (எப்பொழுதாவது) ஒரு சாதகமான சட்டப் பெறுபேற்றை அவர்களுக்கு அளிக்கலாம், ஆனால் அவர்களது அடையாளத்தை அல்லது வன்முறையின் அனுபவத்தை முறையாக பிடிப்பதற்கு அநேகம் தவறுகிறது. அல்லது அவர்கள் குறிப்பாக வலுவளிக்கப்பட்டதாகவோ அல்லது சமுதாயத்தின் தவறான எண்ணங்கள் மற்றும் ஊகங்கள் என்பவற்றின் அடிப்படையில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டதாகவோ உணர்வதற்கும் அது இடமளிக்கவில்லை.

நீதிமன்றங்களும் ஒரு சமூக வெற்றிடத்தில் செயற்படுவதில்லை. சட்டத்தின் எழுத்துக்கள் எந்தளவிற்கு அவர்கள் பக்கம் இருந்தாலும், இலங்கைச் சமுதாயம் முழுவதிலும் காணப்படும் கடுமையான சமூகப் படிநிலைகள் ஓரங் கட்டப்பட்ட அல்லது விலக்கப்பட்ட தனிப்பட்டவர்களுக்கு நீதிக்கான அணுகுவழியை அநேகம் கடுமையானதாக ஆக்குகிறது. மனித உரிமைகள் தொடர்பாக இலங்கைப் பொலிசாரின் நடைமுறைகளைப் பார்க்கும் பொழுது, அண்மையில் நான் நடாத்திய ஒரு ஆய்வில் இது மீண்டும் மீண்டும் நடக்கின்ற சம்பவமாக இருப்பதை நான் கண்டேன். மிக அநேகமாக தவறாக நடாத்தப்பட்ட, வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் சமுதாயத்திற்கு தெரியப்படாதவர்களே. இதனால் சட்டப் பாதுகாப்புகள் இருந்த போதிலும், சட்ட அல்லது பரந்த சமூகத்தின் சில உறுப்பினர்கள் இந்த சமூகத்தில் புறந்தள்ளப்பட்டவர்கள் சார்பாக ஆதரித்து வாதாடுவதற்கு போதுமான பலம் கொண்டவர்களாக உணர்கின்றனர். இவை அனைத்தையும் பட்டி நன்கு அறிவார் என்பதில் சந்தேகம் இல்லை என்பதுடன், அதனாலேயே பெற்றுக் கொண்ட ஆதரவினால் அவர் சற்று மகிழ்ச்சியுடன் ஆச்சரியப்பட்டார், என நான் உறுதியாக உள்ளேன்.

இந்தக் காரணத்திற்காக மனித உரிமைகள் சமூகத்திலுள்ள எங்களில் பலர் இந்த வழக்கை மேற்கொண்டு விசாரிப்பதற்காக அனுமதியளிப்பதற்கான உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தால் மகிழ்ச்சியுடனான ஆச்சரியம் அடைந்தோம். குறிப்பாக, குறைந்தது இந்த வழக்கிலாவது, அரசியலமைப்பின் அத்தியாயம் ஜஜஜ இன் கீழ் நீதித்துறை அதன் பொறுப்பை தீவிரமாக எடுக்கிறது எனும் ஒரு சிறிய ஆனால் நேர்மறையான சமிக்கையை அது வழங்குகிறது. பட்டி நடாத்தப்பட்ட விதத்திற்கோ அல்லது அவருக்கான நிவாரணத்திற்கு பொதுமக்களைத் தூண்டி விடுவதற்கான ஊக்கியாக சட்டம் இல்லாதிருக்கலாம்: அது பெரும்பாலும் ஊடகத்தின் விளைவானதாகக் காணப்படுகிறது. எவ்வாறாயினும், மிக அதிகளவிற்கு கருத்து ரீதியானதாகவும் மற்றும் கொள்கை முறையானதாகவும் தோன்றும் உரிமைகளைக் கோருவதில் சட்டம் பட்டிக்கு ஒரு சாதகமான இடத்தை அளிக்கிறது. இது பட்டிக்காக மட்டும் முக்கியமானதாக இல்லாது இலங்கையில் மனித உரிமைகளின் பயனுறுதியான முன்னேற்றம் மற்றும் பாதுகாப்புக்கான பரந்த விளைவுகளையும் கொண்டுள்ளது. சட்ட முறைமை, நீதிக்கான அதன் வாக்குறுதியை அதிகம் தவறுகையில், ஏனைய சமூகப் பொறிமுறைமுறைகளுடன் உபயோகிக்கப்படும் போது அது தனிப்பட்டவர்கள் மனித உரிமைகளைக் கோருவதற்கான ஒரு மேடையை எவ்வாறாகிலும் வழங்குகின்றதுடன் உறுதியான ஏதோவொன்றாக பொது மக்கள் விவாத்திற்கு அறிமுகப்படுத்த முடியும் என்பதைத் தெரிவிக்கிறது.

முடிவு என்னவாக இருந்தாலும், இதனை மனதில் கொண்டு, பட்டியின் அடிப்படை உரிமைகள் மனு ஒரு முக்கியமான சாத்தியத்திற்காக திறந்துள்ளது. சமுதாயத்திலிருந்து புறந்தள்ளப்பட்ட ஒரு உறுப்பினர் தான் ஒரு பிரஜையாக உணர்வதற்கான ஒரு வாய்ப்பை அது அளிக்கின்றது. அத்தோடு அது சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களினதும் ('பிரபல்யமல்லாதவர்களும்' உள்ளடங்கலாக) கௌரவம் மற்றும் உரிமைகளுக்கான மரியாதையை உறுதிப்படுத்துவதற்கு பற்றுறுதி கொண்ட எங்களுக்கு தற்போதைய உளப்பாங்குகள் மீதான பிரதபலிப்புகளைத் தூண்டிவிடுதல் மற்றும் அவற்றை எதிர்த்தல் என்பவற்றுக்கான ஒரு வாகனமாக இந்த வழக்கை உபயோகிப்பதற்குமான ஒரு வாய்ப்பையும் அது வழங்குகிறது. இதே வேளை, பட்டியின் கதையை, அதீத ஆர்வம் கட்டுப்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு கவனமான வழிநடத்தலையும்

மற்றும் பால்நிலை, வகுப்பு மற்றும் ஒழுக்கம் பற்றி நிலவும் கண்ணோட்டங்களை மாற்றுவதற்கு இறுதியில் குறைந்தளவே பங்களிக்கும் ஆனால் அனுதாபத்தைப் பெறுகின்ற காரணியை இனங் காண்பதற்கும் அது தேவைப்படுத்துகின்றது. அந்த விதத்தில், இந்த வழக்கின் முக்கியத்துவம் பட்டி எதிர்பார்க்கின்ற அங்கீகாரம் மற்றும் நிவாரணம் என்பவற்றை அளிப்பதிலான அதன் திறனிலுள்ளது போன்று நேர்மறையான சமூக மாற்றத்திற்கான சாத்தியங்களைத் தூண்டிவிடுவதிலுமான அதன் திறனிலும் அது அதிகளவு தங்கியிருக்கிறது.

**கலாநிதி. கிரன் கிரெவால**[1]

1 மனித உரிமைகள் சட்டத்தரணி, அவுஸ்திரேலிய கத்தோலிக்கப் பல்கலைக் கழகம் (யுஊரு), சமூக நீதிகள் நிலையம், அவுஸ்திரேலிய கத்தோலிக்க பல்கலைக் கழக உறுப்பினர், கல்வி மற்றும் கலைப் பாடசாலை.

# இலங்கையில் மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்கு அடிமட்ட இழுவையைத் தடைசெய்க

அடிமட்ட இழுவை என்பது கடல் வாழ் உயிரினங்களுக்கு ஆதாரமாவுள்ள கடற்படுக்கைகளுக்கு சொல்லொண்ணா சேதங்களை ஏற்படுத்துகின்ற ஒரு பயங்கரமான செயன்முறையாகும். இது ஒரு வண்ணத்துப்பூச்சியைப் பிடிப்பதற்கு ஒரு புல்டோசர் இயந்திரத்தை உபயோகிப்பதற்கு ஒத்ததாக, ஒரு சில இறாத்தல்கள் புரதத்திற்காக முழு சூழலியல் முறைமையையே அழிப்பதாக உள்ளது. தரையில் இதனை நாங்கள் செய்வதில்லை, அப்படியெனில் சமுத்திரங்களில் ஏன் இதனை மேற்கொள்ளவேண்டும்?

**ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் தேசியக் கடல் மற்றும் வளிமண்டல பிரதான விஞ்ஞானி சில்வியா ஏர்ல்**

இலங்கையின் கடல்நீர்களில் இயந்திரமயப்படுத்தப்பட்ட அடிமட்ட இழுவைப் படகுகளின் உபயோகம் கடல் வளங்களைக் காப்பாற்றுதல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றுக்கு ஒரு அச்சுறுத்தலாகும். இயந்திரமயப்படுத்தப்பட்ட அடிமட்ட இழுவைப் படகுகள் இலங்கையின் வடக்கு கடல்நீர்களில் அத்துமீறும் இந்திய மீனவர்களால் பிரதானமாக உபயோகிக்கபடுகிறது. ஏப்பிரல் 2014 இல், சுமார் 2.000 இந்திய இழுவைப் படகுகள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி நுழைந்ததாக அறிவிக்கப்படுகிறது. சில சம்பவங்களில் இலங்கை மீனவர்களும் கூட இலங்கைக் கடற்கரப்பினுள் அடிமட்ட இழுவைப் படகுகளை உபயோகித்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

அடிமட்ட இழுவை ஒரு பெரிய வலையை உபயோகித்து, அதற்குப் பாரமான நிறைகளை இணைத்து, பின் வலையை கடல்மட்டத்திற்கு குறுக்காக இழுக்கின்ற ஒரு மீன்பிடி முறையாகும். இந்த மீன்பிடி உபகரணம், பிடிபட்ட மீன்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, அதன் உடற் பகுதி ஒரு கீழ் முனையுடன். அடிமட்டத்தில் இழுக்கப்படுகின்ற ஒரு கூம்பு வடிவிலான வலையைக் கொண்டுள்ளது. இயந்திரமயப்படுத்தப்பட்ட அடிமட்ட இழுவை என்பது, சூழலியல் முறைமைக்கு மிக அதிகளவான அழிவுகளை ஏற்படுத்துகின்ற நீடித்து நிலைக்க இயலாத ஒரு மீன்பிடி நடைமுறையாகும்:

1. நீர்வாழ் வாழிடங்களுக்கான சேதம் - வளர்ந்த இனங்களால் சினை முட்டையிடும் பகுதிகளாகவும், மற்றும் இளம் இனங்களால் தங்கியிருப்பதற்கும் மற்றும் பாதுகாப்பிற்காகவும் உபயோகிக்கப்படும் கடல்நில வாழிடங்களைத் தகர்த்து, இந்த மீன்பிடி உபகரணம் கடற்படுக்கையினூடாக கிண்டிச் செல்கிறது.

2. வீண்விரயம் - இழுவைப்படகுகள் அது எதிர்கொள்ளும் ஒவ்வொரு உயிரினம் மற்றும் பொருளையும் தெரிவு செய்யாத வகையிலும் மற்றும் பாரபட்சமுமின்றி பிடிக்கின்றன. சிறிய அளவு மீன்பிடித் தொழில்களுடன் பணியாற்றியதில் பல தசாப்த கால அனுபவங்களைக் கொண்ட, ஒரு மீன்பிடி உயிரியலாளரான, கலாநிதி. ஸ்டீவ் கிரீச் அவர்களின் படி, அடி இழுவைப் படகுகளால் பிடிக்கப்படும் ஒவ்வொரு இறாத்தல் கூனி இறால்களுக்காக, நான்கு மற்றும் பத்து இறாத்தல்களுக்கு இடைப்பட்ட கடல் வளங்கள் ‘துணைப் பிடித்தல்களாக’ கழித்து விடப்படுகின்றன.

3. வளங்களை வெறுமையாக்குகிறது – அடி இழுவைகளின் கழிவுகள் அநேகம் பெறுமதியான இனங்களின் இளம் பருவங்களைக் கொண்டிருப்பதாகவும், இது அந்த இனங்கள் முதிர்ச்சி அடைவதிலிருந்து தடுப்பதாகவும், கலாநிதி. ஸ்டீவ் கிரீச் மேலும் விளங்கப்படுத்தினார். இது, இந்த இனங்கள் இனவிருத்தி செய்வதிலிருந்து தடுக்கின்றதுடன், அதனால் நீண்ட கால நோக்கில் இந்த இனங்களின் எண்ணிக்கையைப் பாதிக்கிறது.

இந்த இழுவை மீன்பிடிப் படகுகளின் அழிவையேற்படுத்தும் பாதிப்பு, ஈற்றில் கடல் வளங்களில் தங்கியுள்ள மீனவர்களின் வாழ்வாதாரங்களையே அழிக்கிறது. இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறுதலுடன், வளங்களுக்காக போட்டியிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதால், குறிப்பாக, வடக்கு மீனவர்கள், அதிகம் பாதிக்கப்பட்டனர். 2013 வரை, இலங்கையில் சுமார் 192.000 குடும்பங்கள், தங்கள் வாழ்வாதாரங்களுக்காக மீன்பிடியில் தங்கியுள்ளனர். இதில் வடக்கு மாகாணத்தை மட்டும் தளமாகக் கொண்டு 41,000 குடும்பங்கள் உள்ளன.




**Photo : Denish C**

கடலில் கடல் வளங்களின் பேணுதலுக்கான கடப்பாடு, கடற் சட்டம் மீதான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை (UNCLOS) மற்றும் ஐக்கிய நாடுகளின் மீன் களஞ்சிய உடன்படிக்கை ஆகிய சட்டவாக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் கடப்பாடுகள், சுற்றாடல் பாதுகாப்பான மீன்பிடி கருவிகளை உபயோகித்தல் மற்றும் உயிரியல் பன்மைத்துவத்தைப் பேணுவதற்கான நடைமுறைகள், வீண்விரயங்கள் மற்றும் கழிவுகளைக் குறைத்தல், மற்றும் அழிவு ஏற்படுத்தும் மீன்பிடி நடைமுறைகளின் தடைசெய்தல் என்பவற்றை உள்ளடக்குகிறது.

மேற் குறிப்பிட்ட சர்வதேச உடன்படிக்கைகளின் ஓர் கையொப்பதாரராக, அதன் மீன்பிடி நடைமுறைகள், உடன்படிக்கையில் அடங்கியவாறு பேணிப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவ முறைமைகளுடன் இணங்குவதை இலங்கை உறுதிப்படுத்த வேண்டிய ஒரு கடப்பாட்டைக் கொண்டுள்ளது.[1]

1 கடற்சட்டம் மீதான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கைக்கு (ருNஊடுழுளு) இலங்கை ஓர் கையொப்பதாரராக டிசம்பர் 10, 1982 அன்று வந்ததுடன், உடன்படிக்கையை ஜூலை 19, 1994 ஆம் ஆண்டு ஏற்று சட்டவலுவளித்தது.

கடல்வளங்கள் மீது அழிவுத் தாக்கங்கள் ஏற்பட்டநிலையில் - இயந்திரமயப்படுத்தப்பட்ட அடிமட்ட இழுவைப் படகுகளுக்கு எதிராக கடல் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு இலங்கை எவ்வாறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது?, என்பது இங்குள்ள கேள்வியாகும்.

அரசின் தற்போதைய சட்டவாக்கம், மீனவர்கள் (உள்நாட்டும் மற்றும் வெளிநாட்டு) இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் முகமாக ஒரு அனுமதியைப் பெறல் வேண்டும் என ஏற்பாடளிக்கிறது.[2] இலங்கையின் கடல்கள், கரையோர நீர்ப்பரப்புகள் மற்றும் கழிமுகங்களில் இழுவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, மீன்பிடிப் படகுகள் ஒரு மேலதிக அனுமதியைப் பெறுதல் வேண்டும்.[3] எவ்வாறாயினும், உள்ளக நீர்ப்பரப்புகள் (அதாவது: பொது ஆறு, ஏரி, வாவி, ஓடை, குளம், கால்வாய் மற்றும் நன்னீர் அல்லது உவர்நீர் கொண்ட வேறு ஏதேனும் பொதுவான நீர்ப்பரப்பு) தொடர்பில் அனுமதி வழங்கப்பட மாட்டாது. இந்த சட்ட ஏற்பாடுகள், உள்ளக நீர்ப்பரப்புகளைத் தவிர, இலங்கையின் நீர்ப் பரப்புகளில் அடி இழுவை தெளிவாக தடைசெய்யப்பட்ட ஒரு நடவடிக்கையாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. பதிலுக்கு, அது அனுமதியளிக்கும் அதிகாரத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற ஒரு நடவடிக்கையாகிறது.

அனுமதியளிக்கும் முறைமை, பல காரணங்களுக்காக இந்த நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான வழிகளை வழங்குவதில் முற்றிலும் போதாததாக உள்ளது. சில சந்தர்ப்பங்களில் தேவையான அனுமதியின்றி இழுவைப் படகுகளைத் தொடர்ந்து உபயோகிப்பதற்கு அரசியல் செல்வாக்கு பிரயோகிக்கப்படுவதால், இந்த இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்துவது கடினமானதாக உள்ளது. முறையான கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு பொறிமுறைகளின்மையால், இழுவைப் படகுகள் உண்மையில் முறையான அனுமதியுடன் தான் மீன்பிடியில் ஈடுபடுகின்றது, என்பதை பரிசோதித்து மற்றும் உறுதிப்படுத்துவதும் பிரச்சினையாக உள்ளது.

ஹொங்கொங், நியுசிலாந்து மற்றும் பெல்ஸி போன்ற மற்றைய நாடுகளின் நியாயாதிக்கங்கள், அவற்றின் கடல்வளங்களின் நிலையான பேணுதலுக்கான நேர்மறையான பெறுபேறுகளுடன், அடிமட்ட இழுவையை முற்றிலுமாகத் தடைசெய்வதை ஏற்றுக்கொண்டுள்ளன. அதைப் போன்றே, இலங்கையின் அனைத்து நீர்ப்பரப்புகளிலும் இந்த நடைமுறையைத் தடைசெய்யும் ஒரு சட்டவாக்கத்தை சட்டமாக்குதல் மூலம், இலங்கையில் அடிமட்ட இழுவை மீதான ஒரு தடை, இலங்கை மற்றும் இந்திய இழுவைப் படகுகளைப் பொறுத்த வரை, இந்தப் பிரச்சினைக்கான சிறந்த தீர்வாக இருக்க முடியும்:

- இலங்கை இழுவைப் படகுகள் - அடிமட்ட இழுவை மீதான ஒரு தெளிவான தடை, அனுமதியளிக்கும் நிர்வாக முறைக்கான தேவையை நீக்கும். இது தற்போதுள்ள தவறான முகாமைத்துவம் மற்றும் பலவீனமான கட்டுப்பாட்டு நடைமுறைகள் என்பவற்றுடன் இணைந்த பிரச்சினைகளை இல்லாதொழிக்கும். அது, முதலில் இலங்கையின் நீர்ப்பரப்புகளில் இழுவைப் படகுகள் இருத்தல் கூடாது என்பதினால், அரசியல் செல்வாக்கு மூலமாக இழுவைப் படகுகளுக்கான அனுமதிகளைப் பெறுகின்ற நடைமுறைகளையும் கூட இது குறைக்கும்.

- இந்திய இழுவைப் படகுகள் - கடற்சட்டம் மீதான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை (UNCLOS) மற்றொரு நாட்டுக்குச் சொந்தமான நீர்ப்பரப்புகளில் நாடுகள் மீன் பிடிப்பதற்கு, அவை அந்த நாட்டினால் பிரயோகிக்கப்படுகின்ற பாதுகாத்து பேணல் முறைமைகளுடன் இணங்குதல் வேண்டுமெனத் தேவைப் படுத்துகின்றது.[4] இந்தியா, இந்த உடன்படிக்கைக்கான (UNCLOS), கையொப்பதாரராக உள்ளதினால், இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு கடப்பாடு கொண்டதாக உள்ளது.[5] இலங்கை, கடல் வளங்களின் பாதுகாத்தலை, இந்தியத் தரப்புகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான ஒரு அடிப்படையாகப் பாவிக்க முடியுமென்பதோடு, இலங்கையின் நீர்ப்பரப்புகளில் எந்தவொரு இந்திய இயந்திர மயப்படுத்தப்பட்ட அடிமட்ட இழுவை மீன்பிடித்தலின் நிறுத்துதலிற்கும் கோர முடியும். இவ்வாறு செய்யத் தவறுவது, கடல் வளங்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பதன் அடிப்படையில் சர்வதேச நடவடிக்கைகளுக்கான ஏதுநிலையையும் அநேகம் ஏற்படுத்தலாம்.

இந்த இழுவைப் படகுகளின் அழிவையேற்படுத்தும் பாதிப்பு, மீனவர்கள், தங்களின் தற்போதைய வளங்களை இழக்கப் பண்ணுவதை ஏற்படுத்துகிறதன் மூலம், கடல்வளங்களின் மீளமைப்பு பெறுதலைத் தடுக்கின்றதன் மூலம், மீனவர்களின் எதிர்கால வளங்களையும் கூட இழக்கச் செய்கிறது. அடிமட்ட இழுவையைத் தடைசெய்யும் சட்ட நடவடிக்கையே இந்த மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல் நோக்கிய மிகவும் பயனறுதியான நடவடிக்கையாக இருக்க முடியும்.

**வித்தியா நத்தானியல்[6]**

---

இலங்கை, மீன் களஞ்சிய உடன்படிக்கையின் ஒரு ஒப்பந்ததாரராக ஒக்டோபர் 9, 1996 அன்று வந்ததுடன், உடன்படிக்கையை ஒக்டோபர் 24. 1996 அன்று ஏற்று சட்டவலுவளித்தது.

2 உள்நாட்டு மீன்பிடிப் படகுகள் 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீரியல் வளச் சட்டத்தின் கீழ் அனுமதியைப் பெறுகின்றன, மற்றும் வெளிநாட்டு மீன்பிடிப் படகுகள் 1979 ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க மீன்பிடிச் சட்டத்தின் கீழ் (வெளிநாட்டுப் படகுகள் மீதான கட்டுப்பாடுகள்) அனுமதியைப் பெறுகின்றன.

3 1996 ஆம் ஆண்டின் அதிவிசேட வர்த்தமானி இல.948/25

4 கடற்சட்டம் மீதான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையின் (UNCLOS) உறுப்புரை 61 (4)

5 கடற்சட்டம் மீதான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கைக்கு (UNCLOS) இந்தியா ஒரு கையொப்பதாரராக டிசம்பர் 10, 1982 ஆம் ஆண்டு வந்ததுடன் அது அதந்த உடன்படிக்கையை ஜூன் 29, 1995 ஆம் ஆண்டு ஏற்று சட்டவலுவளித்தது.

6 சட்டத்தரணி, வேர்டி ஆராய்ச்சி மையத்தில் பகுப்பாய்வாளர், LLB (University of London)

# இலங்கையில் அங்கவீனமுற்றவர்களின் நிலை தொடர்பான கண்ணோட்டம்



**Photo : Meena Kadri**

அணுகுவழியின்மை மற்றும் கட்டியமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் என்பவற்றிலிருந்து, கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, பிரயாணம் மற்றும் பொழுதுபோக்கு வரைக்கும் என அங்கவீனமுற்றவர்களின் தேவைகள் கவனம் செலுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

ஒரு 30 வருட யுத்தத்தின் முடிவின் பின்னர் அங்கவீனமுற்றவர்களின் எண்ணிக்கை கணிசமானளவிற்கு அதிகரித்துள்ளது. அவர்களது நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் முன்னேற்றுவதற்கும் பல முயற்சிகள் இருந்த போதிலும், அங்கவீனமுற்றவர்களின் பொதுவான மனக் குறைகள் அப்படியே இருந்தன.

**இலங்கையில் அங்கவீனமுற்றவர்கள் தொடர்பான சட்டச் செயன்முறைகள்**

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்றவர்களின்

உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டமே, இன்று வரை, இலங்கையில் அங்கவீனமுற்றவர்களை நிர்வகிக்கின்ற முக்கியமான சட்டவாக்கமாகும். அங்கவீனமுற்றவர்களின் நலன்கள் மற்றும் உரிமைகளை முன்னேற்றுவதற்கு, சமூக சேவைகள் அமைச்சைத் தலைமையாகக் கொண்டு, அங்கவீனமுற்றவர்களுக்கான ஒரு தேசிய சபையை அது உருவாக்குகிறது. இந்த சட்டவாக்கம் அங்கவீனமுற்றவர்களுக்கு உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையைக் கொண்டிருக்காததுடன் ஒரு தேசிய மட்டத்தில் ஓர் அங்கவீனமுற்றவர்கள் தொடர்பான கொள்கையை உள்ளிணைத்து ஆதரிப்பதில் அரசின் வகிபாகத்தை ஏற்படுத்துவதற்கு தெளிவான முறையில் தவறுகிறது.

அங்கவீனமுற்றவர்கள் எவ்வாறு நோக்கப்பட வேண்டும் என்பதில் உலகளவில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளதுடன் அது, அங்கவீனமற்றவர்களின் மருத்துவ மாதிரி மற்றும் சமூக மாதிரி எனும் இரண்டு பரந்த மாதிரிகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. அங்கவீனமுற்றவர்களின் மருத்துவ மாதிரி அங்கவீனத்தை அங்கவீனமுற்ற தனிப்பட்டவரின் ஒரு 'பிரச்சினையாகவும்', அது அங்கவீனமுற்ற நபர் தவிர்ந்த ஏனைய எவரினதும் கரிசனைக்குரிய விடயமல்ல எனவும் நோக்குகிறது. மற்றைய,



**Photo : Jason Turgeon**

கூடுதல் முன்னேற்றமான மாதிரியான, சமூக மாதிரி, அங்கவீனமுறாத பெரும்பான்மையான மக்களின் தேவைகளைத் திருப்தி செய்வதற்காக அனைத்தையும் வடிவமைப்பதன் மூலமாக, சமூகமே மக்களை அங்கவீனர்களாக்குகிறது எனும் கருத்தியல் மீது அமைந்ததாக உள்ளது. அங்கவீனமுற்ற ஒரு தனிப்பட்டவரை ஒரு முழுமையானதும் மற்றும் பயனுறுதியானதுமான வாழ்க்கைக்கு இட்டுச் செல்வதிலிருந்து விலக்குகின்ற, செயலிழக்கச் செய்யும் தடைகளைக் குறைப்பதற்கும், ஈற்றில் நீக்குவதற்குமான பொறுப்பை சமூக மாதிரி சமூகத்தின் மீது பெரிதும் இடுகின்றது. சமூக மாதிரி அனுதாபத்திலிருந்து அப்பால் நகர்கிறது - அங்கவீனமுற்ற தனிப்பட்டவர்கள் ஏனைய பிரஜைகளுடன் ஈடுபடுவதற்கும் மற்றும் சமுதாயத்தில் தங்கள் உரிமைகளைச் சமனான வகையில் அப்பியாசிப்பதற்கும் வலுவளிக்கின்ற ஒன்றின் மீதே அங்கவீனமுற்றவர்கள் மீதான சமூக நலனின் மையப் பார்வை உள்ளது.

அங்கவீனமுற்றவர்களை நன்கொடையின் "குறிக்கோள்களாக" பார்க்கும் அணுகுமுறையைக் கைவிட்டு, பதிலுக்கு அவர்களை உரிமைகளுக்கு "உட்பட்டவர்களாக" கருதுவது, அங்கவீன முற்றவர்களின் உரிமைகள் மீதான 2006 உடன்படிக்கையால் (UNCRPD) மேலும் வலுவளிக்கப் படுகிறது. இந்த உடன்படிக்கை, உள்ளார்ந்த கௌரவம், தனிப்பட்ட சுயநிர்ணயம், பாரபட்சம் காட்டப் படாதிருப்பதற்கான கொள்கை, சமுதாயத்தில் முழுமையானதும் மற்றும் பயனுறுதியானதுமான பங்கேற்றல் மற்றும் உள்ளிணக்கப்படல், வாய்ப்புகளுக்கான சமனான தன்மை மற்றும் அணுகுவழிகள் போன்ற சர்வதேச மனித உரிமைகள் கோட்பாடுகளுக்கு வலியுறுத்தலைத் தருகிறது. 2007 இல் இந்தப் பிரகடனத்தில் கைச்சாத்திட்ட முதல் நாடுகளில் இலங்கையும் ஒன்று, ஆனால், இதனை ஏற்று சட்ட வலுவளிப்பதற்கு இலங்கை இன்னமும் தவறியுள்ளது.

அங்கவீனமற்றவர்களின் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் உடனபடிக்கையுடன் (UNCRPD) இணைந்ததாக இலங்கையின் சட்டவாக்கத்தைக் கொண்டு வருவதற்கு அங்கவீனமுற்றவர்கள் தொடர்பான 2003 ஆம் ஆண்டின் தேசியக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு சமூக சேவைகள் அமைச்சு ஒரு புதிய சட்ட மூலத்தைப் பிரேரித்தது. 2006 இல் ஒரு புதிய சட்ட மூலம் வரையப்பட்டது, அது உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை ஊடாக கவனம் செலுத்துவதற்கு முயற்சித்தது. இந்தச் சட்டமூலம் அங்கவீனமுற்றவர்கள் உரிமைகள் அதிகாரசபையை ஸ்தாபித்தது, அது ஒரு சுயவதிகாரம் கொண்ட அமைப்பாக இருப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும். சமூக சேவைகள் அமைச்சு அதன் அதிகாரத்தின் மதிப்புக் குறைவினால் சினங் கொண்டு 2006 சட்டமூலத்தை நிராகரித்ததுடன் 2010 இல் அங்கவீனமுற்றவர்களின் உரிமைகள் பாதுகாப்பு என்ற பெயரில் ஒரு புதிய சட்ட மூலத்தைப் பிரேரித்தது. இந்த சட்டமூலம் அமைச்சரால் தலைமை தாங்கப்படுகின்ற அங்கவீனமுற்றவர்களுக்கான ஒரு தேசிய சபையை ஸ்தாபித்தது. அங்கவீனமுற்றவர்கள் உரிமைகள் தொடர்பான எந்தவொரு அக்கறை கொண்டவர்களுடனும் கலந்தாலோசிக்காது வரையப்பட்ட 2010 சட்டமூலத்திற்கு கடுமையான எதிர்ப்புக் காணப்பட்டதுடன் அது 2006 சட்டமூலத்தில் உடன்பட்ட உரிமைகளை கணிசமானளவிற்கு குறைத்தது.

மேலும் 2010 சட்டமூலம், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சமவாயத்தின் அமுல்படுத்தலும் மற்றும் கண்காணித்தலும் ஒரு தேசிய மட்டத்திலான ஒரு சுயநிர்ணயம் கொண்ட அமைப்பினால் மேற் கொள்ளப்படல் வேண்டும் என்பதைத் தேவைப்படுத்தும் பாரீஸ் கோட்பாடுகளையும் மீறுகிறது.

2010 சட்டமூலம் மீதான கடுமையான விமர்சனங்கள் காரணமாக, சமூக சேவைகள் அமைச்சர் தனது நிலைப்பாட்டடை மீளவும் கவனத்தில் கொண்டார். மே, 2014 இல் 2014 இற்கான அங்கவீன முற்றவர்களின் உரிமைகள் சட்டமூலம் இலங்கையிலுள்ள அங்கவீனமுற்றவர்களின் உரிமைகள் இயக்கத்தினால் பிரேரிக்கப்பட்டது. இந்தச் சட்டமூலம் 2006 சட்டமூலத்தின் ஒரு மேம்படுத்தப்பட்ட வடிவம் என்பதோடு, அது 'அங்கவீனமுற்றோர் உரிமைகள் அதிகாரசபை' எனும் பிரச்சினைக்குரிய நிலைப்பாட்டை 'அங்கவீனமுற்றவர்கள் உரிமைகள் ஆணைக்குழு' என்பதால் மாற்றீடு செய்தது. ஆணைக்குழு அங்கவீனமுற்றவர்கள் தொடர்பான அனுபவம், செயற்றிறன் மற்றும் அங்கீகாரம் கொண்ட ஆட்களைக் கொண்டிருப்பதற்கும் மற்றும் அங்கவீனமுற்றவர்கள், தொழில்சார் தகைமையாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் வேலைவாய்ப்பு, தொழில் பயிற்சி, ஆரோக்கியம், கல்வி போன்றவை தொடர்பாக அமைச்சிலிருந்து மூன்று அதிகாரிகளையும் உள்ளடக்கும்.

துரதிர்'டவசமாக இந்தச் சட்டமூலமும் அமைச்சரினால் நிராகரிக்கப்பட்டதுடன் தற்போது அங்கவீனமுற்றவர்கள் உரிமைகள் சட்டவாக்கச் செயன்முறை எந்தவொரு உறுதியான நிலையையும் எட்டாது உள்ளது.

## சட்டவாக்க மாற்றங்கள்

உயர் நீதிமன்றத்தில் கலாநிதி. அஜித் சி.எஸ். பெரேரா எதிர் சட்ட மா அதிபர் மற்றும் ஏனையவர்கள் எனும் வழக்கில் [S.C. (FR) 221/2009] அனைத்துப் புதிய பொதுக் கட்டிடங்களும் அங்கவீனமுற்றவர்களுக்கு அணுகத்தக்கதாக நிர்மாணிக்கப்படுதல் வேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டது. கட்டிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டதும், அங்கவீனமுற்ற ஆட்கள் கட்டிடங்கள், கழுவறைகள் மற்றும் பொதுவசதிகள் என்பவற்றை அணுகுவதற்கான வழிகளைக் கொண்டுள்ளனர் என சான்றிதழ் படுத்தப்படுவதற்கும்

நீதிமன்றம் கட்டளையிட்டது. மேலும், அணுகுவழிக் கட்டுப்பாட்டு வர்த்தமானி 1619/24 (2009.09.18), பொதுச் சேவைகள் கிடைக்கின்ற 'தற்போதுள்ள அனைத்துப் பொதுக்கட்டிடங்கள், பொது இடங்கள் என்பன இந்தக் கட்டுப்பாடுகள் செயற்பாட்டுக்கு வருவதிலிருந்து ஒரு எட்டு வருட காலப் பகுதிக்குள், இந்தக் கட்டுப்பாட்டு விதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கியதாக, அங்கவீனமுற்ற ஆட்களுக்கு அணுகத்தக்கதாக ஆக்கப்படல் வேண்டுமெனவும் ஏற்பாடாளிக்கிறது. இந்தக் கட்டுப்பாட்டு விதிகளின் படி, அனைத்து அரச கட்டிடங்களும் 2017 அளவில் அங்கவீனமுற்ற ஆட்களுக்கு அணுகத்தக்கதாக ஆக்கப்படுதல் வேண்டும்.

2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம், ஓர் அங்கவீனமுற்ற வாக்காளர், தேர்தலில் வாக்களிக்கும் போது, ஒரு நபரினால் துணை வருவதற்கு இயலும் வகையில் சட்டமாக்கப்பட்டது. அங்கவீனமுற்ற ஆளுடன் துணைக்கு வரும் நபர் வாக்களிப்பு நிலைய அதிகாரி மற்றும் ஒரு வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர் முன்னிலையில் வாக்குச் சீட்டில் வாக்கினை அடையாளம் இடலாம். 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டத்திற்கான திருத்தங்களுக்கு அமைய, தனது வாக்கைச் செலுத்துவதற்கு அங்கவீனத்துடனான ஒரு நபர், சட்டத்தின் 5ஆம் அட்டவணைக்கு அமைவாக தகைமைச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். தகைமைச் சான்றிதழ் விண்ணப்பதாரியினாலான ஒரு அறிவித்தல், ஒரு கிராம சேவகர் மற்றும் ஒரு மருத்துவ அதிகாரியினாலான ஒரு சான்றிதழ் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

### சமூக மாற்றங்கள்

அங்கவீனமுற்ற ஆட்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் தனியார் துறையினால் பல சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முன்னணி நிறுவனங்கள், வங்கிகள், நிலையங்கள் என்பன அங்கவீனமுற்ற ஆட்களை வேலைக்கு எடுத்து ஒருங்கிணைக்கும் எண்ணத்திற்கு மிகவும் திறந்த வகையிலான ஆதரவை நல்கின.

கொழும்பு பல்கலைக் கழகம் போன்ற உயர் கல்வி நிலையங்கள் அங்கவீனமுற்றவர்களுக்கான கல்விக்கான உரிமை மற்றும் வேவைவாய்ப்பு என்பவற்றை முன்னேற்றுவதில் முன்னிலையை எடுத்தன. கலைப் பீடத்தின் "அங்கவீனத்துடனான மாணவர்களுக்கான உதவி மையம்" அதன் கலை உதவி மென்பொருளின் உதவியுடன் கட்புலக் குறைபாடுகளுடனான ஆட்களுக்கு தெற்காசியாவிலேயே முதன்மையான நிலையமாக உள்ளது.

அத்தோடு இலங்கையில் அங்கவீனம் கொண்ட தடகள வீரர்களுக்கும் பெரும் ஆதரவு உள்ளது. அதன் விளைவாக, தென்கொரியாவில் 2014 இல் ஆசிய அங்கவீனமுற்றவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை 14 பதக்கங்களை வெல்லக்கூடியதாக இருந்தது.

### இலங்கையில் அங்கவீனமுற்ற நபர்களுக்கான எதிர்காலம்

அங்கவீனத்துடனான ஆட்களின் நிலையை மாற்றுவதற்கு அரச மற்றும் தனியார் துறைகளினால் பல குறிப்பிடத்தக்க நகர்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இலங்கையில் சமனான பிரஜைகளாக அங்கவீனமுற்ற ஆட்களும் தங்களது உரிமைகளை முழுமையாக அப்பியாசிப்பதற்கு அதிகளவு செய்யப்பட வேண்டியுள்ளது.

தங்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மற்றைவர்கள் மீது இன்னமும் அதிகளவு தங்கியிருப்பதால் அங்கவீனமுற்ற ஆட்களின் தனிப்பட்ட சுய தொழிற்பாடு தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாகவே உள்ளது. பொதி செய்யப்பட்ட பொருட்களில் பிரெய்லி எழுத்துக்களுக்கான வசதி இல்லையாதலால், பொதி செய்யப் பால் பக்கெற்றுகள், மருந்துகள் மற்றும் ஏனைய அடிப்படைப் பொருட்களைக் கொள்வனவு செய்வது, கட்புலக் குறைபாடு கொண்டவர்களுக்கு இன்னமும் கடினமான பணியாகவே உள்ளது. இன்னொருவர் உதவியின்றி ஒரு இரயில் நிலையத்தை அணுகுவதற்கு அல்லது ஒரு பஸ் வண்டியில் ஏறுவதற்கு முடியாத ஒரு சக்கர நாற்காலியை உபயோகிப்பவருக்கு ஒரு பஸ் வண்டியை அல்லது இரயிலைப் பிடிப்பதும் அநேகம் சாத்தியமற்றதாக உள்ளது.

அங்கவீனமுற்ற ஆட்களிற்கு சாதகமாக மாற்றங்களைக் கொண்டு வருவதில் அரசு ஒரு முக்கியமான வகிபாகத்தைக் கொண்டுள்ள வேளையில், அது தனியே அரசின் பொறுப்பு மட்டும் இல்லையென்பதை மனதில் கொண்டிருப்பதும் முக்கியமானதாகும். அனுதாப உணர்வு வெளிப்பாடுகள் மற்றும் ஓர் அங்கவீனமுற்ற நபரிடமிருந்து நாங்கள் கேட்குின்ற கேள்விகளிலிருந்து ஒரு அங்கவீனமுற்ற நபரை வேலைக்கு அமர்த்தும் போது அல்லது பாடசாலையில் அனுமதிக்கும் போது வரவேற்கும் வரையிலான எளிமையான மாற்றங்கள் என, தனிப்பட்டவர்கள், சமூகங்கள், அரச - தனியார் அமைப்புகள் மற்றும் ஒரு முழுமையாக நாடு என்பவற்றினால் எடுக்கும் சாதகமான நடவடிக்கைகளால் பிரச்சினைகளும் தப்பபிப்பிராயங்களும் கவனம் செலுத்தப்பட முடியும். 'அங்கவீனம்' என்பது அங்கவீனமுற்ற தனிப்பட்டவரை மட்டும் கவனம் கொள்கின்ற ஒரு பிரத்தியேகமான விடயமல்ல, மாறாக ஒரு முழுமையானதாக சமுதாயம் முகங் கொடுக்க வேண்டிய ஒரு சவாலாக அது உள்ளது.

**அனுஷ்கா குணவர்த்தன**[1]

1 சட்டத்தரணி

**_Published with support from CCFD_**
*Send your stories, photos and cartoons to lst.escrprogram@gmail.com*
*Signed articles are the view of the writer.*

*Published in Sinhala, tamil & English and downloadable from*
*http://www.lawandsocietytrust.org/resources.html*